Koviloor Digital Library

சிறுமணவை முனிசாமி பாடிய

நடராஜ பத்து

பாட்டும் உரையும்



ACC No 40264
Q 23

உரையாசிரியர்
புலவர் திரு. மு. இராமலிங்கம்

Koviloor Digital Library

Koviloor Digital Library

45/1

சிறுமணவை முனிசாமி பாடிய

நடராஜபத்து

பாட்டும் உரையும்

உரை ஆசிரியர்

திருக்குறள் தொண்டர்

புலவர் திரு. மு. இராமலிங்கம்

கொட்டாம்பட்டி

40264

எல் கே எம் பப்ளிகேஷன்

10, ராமச்சந்திரா தெரு,

தியாகராய நகர், சென்னை – 600 017.

தொலைபேசி : 28142241 / 9940682929

Koviloor Digital Library

முதல் பதிப்பு : செப்டம்பர் 2016
இரண்டாம் பதிப்பு : டிசம்பர் 2019

விலை : ரூ.15/–

நூல் வரலாறு

பண்டிதரும் பாமரரும் படித்துணரத்தக்க ஒரு சிறிய பெரிய கருத்துடைய நூலைப் பாடியவர் நம் தமிழகத்தில் சுமார் முந்நூறு ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்த மணவை முனிசாமி என்ற பக்தர் ஆவர்.

சைவர்கள் பெரிதும் விரும்புகின்ற சிதம்பரத் தலத்தில் சிவபெருமான் எழுந்தருளியதுடன் ஆனந்தத் தாண்டவத்தையே பெரிதும் விரும்புவர்.

அம்முறையில் நம் ஆசிரியர் ஊர்த்துவத் தாண்டவம், சந்தியா தாண்டவம், காளிகா தாண்டவம், திரிபுர தாண்டவம் என்ற பற்பல தாண்டவத்தில் சிதம்பரத்தலத்தில் நடராசப் பெருமான் ஆடுகிற ஆனந்தத் தாண்டவத்தின் பெருமையை அடியார்கள் விரும்புவர்.

நாமே அதனைப் படித்து அதன் வழி நடந்து தில்லை அம்பலவாணன் பொற்பாதம் பணிந்து உய்திபெறுவோம்.

இதுநாள் வரை எவராலும் உரை எழுதாத இந்நூலுக்கு அனைவரும் படித்துணர எளிய இனிய உரையை கொட்டாம்பட்டி வாழ் புலவர் திரு.மு.இராமலிங்கம் எழுதியுள்ளார்.

இந்நூலை வாங்கிப் படித்துப் பயன் பெறுக.

இவண்,
எல்கேஎம் பப்ளிகேஷன்
சென்னை

Koviloor Digital Library

45/1

நடராஜ பத்து

திருச்சிற்றம்பலம்

1

மண்ணாதி பூதமொடு விண்ணாதி அண்டம் நீ
மறை நான்கின் அடிமுடியும் நீ
மதியும் நீ ரவியும் நீ புனலும் நீ அனலும் நீ
மண்டலம் இரண்டேழும் நீ

பெண்ணும் நீ ஆணும் நீ பல்லுயிர்க்கு உயிரும் நீ
பிறவும் நீ ஒருவன் நீயே
பேதாதி பேதம் நீ பாதாதி கேசம் நீ
பெற்றதாய் தந்தை நீயே

பொன்னும் நீ பொருளும் நீ இருளும் நீ ஒளியும் நீ
போதிக்க வந்த குருவும் நீ
புகழொணாக் கிரஹங்கள் ஒன்பதுவும் நீ யிந்தப்
புவனங்கள் பெற்றவனும் நீ

எண்ணரிய ஜீவகோடிகளீன்ற அப்பனே
என் குறைகள் யார்க்கு உரைப்பேன்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராஜனே.

பொழிப்புரை:

இறைவனே சிவகாம சுந்தரி அம்மையின் அன்பிற் குரியவனே! என்னைப் பெற்ற தந்தையே தில்லை என்ற சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள நடராசப் பெருமானே

Koviloor Digital Library

உன்னைப் பற்றி நான் அறிந்ததைக் கூறுகிறேன் நீ அதைக் கேட்க வேண்டும்.

நீ நிலம், நீர், காற்று, தீ, வானம் என்ற ஐந்து பூதமாக இருக்கின்றாய். வானம், முட்டை, பீசம், வித்து, உலகம் ஆகவும் உள்ளாய். ரிக், யஜுர், சாம, அதர்வணம் என்ற வேதத்தின் முதலாகவும், அதன் முடிவாகவும் இருக்கின்றாய். சந்திரனாகவும், சூரியனாகவும் விளங்கி நீர், தீயாக இருந்து பூலோகம், புவலோகம், சர்வலோகம், சனலோகம், தபோலோகம், சத்தியலோகம், மகாலோகம் என்ற மேலுலகம் ஏழாகவும்; அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதாலம் என்ற கீழ் உலகம் ஏழாகவும் இருக்கின்றாய். பிறப்பிற்குக் காரணமான பெண்ணும் ஆணுமாக இருந்து பற்பல விதமாகத் தோன்றுகிற பல உயிர்கட்கு எல்லாம் உள் உயிராக இருக்கின்றாய். இவை அல்லாத பிறவாகவும் ஒப்பற்றவனாகவும் நீயே விளங்குகின்றாய். வேற்றுமையும் ஒற்றுமையாகவும் இருக்கின்றாய். எல்லாவற்றிற்கும் அடியாகவும் முடியாகவும் விளங்குகின்றாய். உயிர் கட்குத் தாயாகவும் தந்தையாகவும் நீயே இருக்கின்றாய். பொன்னும் பொருளுமாகவும் உள்ளாய். ஒளியற்ற இருளாகவும், இருளற்ற ஒளியாகவும் உள்ளாய். நல்லவற்றைக் கூறவந்த சற்குருவாகவும் உள்ளாய். பெருமை கூறமுடியாத சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, இராகு, கேது என்ற ஒன்பது கோள்களாகவும் உள்ளாய்.

இந்தக் காணப்படுகின்ற உலகத்தைப் படைத்தும் உள்ளாய். இதில் எண்ண முடியாத உயிர்க் கூட்டத்தைப் பெற்றுள்ளாய். இவ்வாறுள்ள உன்னிடம் எனக்குள்ள குறையைச் சொல்ல வேண்டும். உன்னிடம் கூறாமல் வேறு யாரிடம் கூற முடியும்.

Koviloor Digital Library

2

மானாட மழுவாட மதியாட புனலாட
மங்கை சிவகாமியாட
மாலாட நூலாட மறையாட திரையாட
மறை தந்த பிரம்மனாட

கோனாட வானுலக கூட்டமெல்லாம் ஆட
குஞ்சர முகத்தனாட
குண்டலம் இரண்டாட தண்டை புலியுடை யாட
குழந்தை முருகேசன் ஆட

ஞான சம்பந்தரோடு இந்திராதி பதினெட்டு முனி
அஷ்ட பாலகருமாட
நரை தும்பை யறுகாட நந்தி வாகனமாட
நாட்டியப் பெண்களாட

வினையோட உனைப்பாட எனைநாடி இதுவேளை
விருதோடு ஆடி வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராஜனே.

பொழிப்புரை:

இறைவனே, சிவகாம சுந்தரி அம்மையின் அன்பிற் குரியவனே! என்னைப் பெற்ற தந்தையே தில்லை என்ற சிதம்பரத்தில் எழுந்தருளி நடனமாடுகின்ற நடராசப் பெருமானே! உன்னைப் பற்றி நான் அறிந்ததைக் கூறுகின்றேன் நீ அதைக்கேட்டு அருளுவாயாக.

ஈசனே நீ அங்கு நடனம் ஆடும்போது என்ன நடை பெறுகிறது தெரியுமா? உன் கையில் தாங்கியுள்ள மான் ஆடுகிறது. மழு என்ற படை ஆடுகின்றது. தலையில் அணிந்த பிறைச் சந்திரன் ஆடுகிறது. சடாமுடியில்

Koviloor Digital Library

தங்கிய கங்கை ஆடுகிறது. உன் துணைவியாகிய சிவகாம சுந்தரி அம்மை ஆடுகிறாள். திருமால் ஆடுகிறார். அவர் அணிந்துள்ள பூணூல் ஆடுகிறது. நான்கு வேதச் சொற்கள் ஆடுகிறது. கட்டியுள்ள திரைச்சீலை ஆடுகிறது.

நான்கு மறை தந்த பிரமதேவன் ஆடுகிறான். தேவலோகத் தலைவன் (இந்திரன்) ஆடுகிறான். அங்குள்ள தேவர் கூட்டம் எல்லாம் ஆடுகிறது. யானை முகம் பெற்ற விநாயகர் ஆடுகின்றார். உன் காதில் அணிந்துள்ள இரண்டு குண்டலம் என்ற அணி ஆடுகிறது. காலில் அணிந்த தண்டையும் இடையில் அணிந்த புலி ஆடையும் ஆடுகிறது. இளையவனான முருகேசன் ஆடுகிறான். ஞானசம்பந்தருடன் இந்திரன் முதலான அமரர், சித்தர், அசுரர், தைத்திரியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், இயக்கர், பூதர், வஞ்சையர், கந்தருவர், அந்தரர், பசாசர், முனிவர், உரகர், விண்ணோர், மண்ணோர் என்ற பதினெட்டு வகைக் கூட்டமும் அங்கு ஆடுகிறது.

அட்டதிக்குப் பாலர்களான இந்திரன், அக்னி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் என்பவரும் ஆடினார்கள். வெண்ணிறம் பெற்ற தும்பை மலரும் அருகு மாலையும் ஆடின. உன் வாகனமான நந்தியும் ஆடினார். அங்கு வழக்கமான நாட்டியம் ஆடக்கூடியப் பெண்களும் ஆடினார்கள். நான் முன்பு செய்த தீவினைகள் ஓடின. உன்னைப் பாட அருள் கிடைத்தது. அதனால் ஈசா நீ வருவதற்குரிய காலமும் இப்போதுதான். நீ உன் நந்திக் கொடியான வெற்றிக் கொடியுடன் எழுந்தருள வேண்டுகின்றேன்.

Koviloor Digital Library 45/1

3

கடலென்ற புவிமீதில் அலையென்ற உருக்கொண்டு
கனவென்ற வாழ்வை நம்பி
காற்றென்ற மூவாசை மாருதச் சுழலிலே
கட்டுண்டு நித்த நித்தம்

உடலென்ற கும்பிக்கு உணவென்ற இரைதேடி
ஓயாமல் இரவு பகலும்
உண்டுண்டு உறங்குவதைக் கண்டதே யல்லாது
ஒருபயன் அடைந் திலேனை

தடமென்ற மிடைகரையில் பந்த பாசங்களெனுந்
தாபரம் பின்னலிட்டு
தாயென்று சேயென்று நீயென்று நானென்று
தமியேனை யிவ் வண்ணமாய்

இடையென்று கடைநின்று ஏனென்று கேளா
திருப்பதுஉன் அழகாகுமோ
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராஜனே.


பொழிப்புரை:

இறைவனே சிவகாம சுந்தரி அம்மையின் அன்பிற் குரியவனே என்னைப் பெற்ற தந்தையே தில்லை என்ற சிதம்பரத்தில் எழுந்தருளியுள்ள நடராசப் பெருமானே! நான் உரைப்பதை நீ கேட்பாயாக!

கடல் என்ற இந்த உலகில் கடல் அலை போன்று உருக்கொண்டு விளங்குகின்றது. ஆனால் கனவு காண்பதைப் போன்ற வாழ்வை விரும்பி காற்றுக்கு ஒப்பான மண், பெண், பொன் என்ற காற்றின் சுழற்சியால் கட்டுப்பட்டு ஒவ்வொரு நாளும் உடலில்

Koviloor Digital Library

உள்ள வயிற்றுக்கு உணவைத்தேடி இடைவிடாது இரவும், பகலும் பொருளீட்டி உண்டு, உறங்கி வாழ்வதன்றி வேறு ஒரு பயனையும் நான் கண்டதில்லை. ஆனால் இடிகின்ற கரைப்போன்ற பந்தம் பாசத்தை தாமரைத் தண்டில் தோன்றும் நூல் (உறுதியற்றது) இழையால் பின்னப்பட்டுத் தாய், குழந்தை என்றும் நீ நான் என்றும் கூறித் தனியே வாழ்கின்றேன். இப்படி நான் இருக்கும்போது நீ இடையில் வந்து, கடைசியிலும் நின்று நான் துன்புறும்போது நீ ஏன் இப்படி வருத்துகின்றாய், என்று நடராசனே நீ கேட்காமல் இருப்பது உனக்கு அழகாகுமோ நீ கேட்க வேண்டும்.



Koviloor Digital Library

4

பம்புசூ னியமல்ல வைப்பல்ல மாரணந்
தம்பனம் வசியமல்ல
பாதாள வஞ்சனம் பரகாயப் பிரவேசம்
அதுவல்ல சால மல்ல

அம்பு குண்டுகள் விலகமொழியும் மந்திரமல்ல
ஆகாய குளிகை யல்ல
அன்போடு செய்கின்ற வாத மோடிகளல்ல
அரிய மோகனமு மல்ல

கும்பமுனி மச்சமுனி சட்டமுனி பிரம்ம ரிஷி
கொங்கணர் புலிப் பாணியும்
கோரக்கர் வள்ளுவர் போகமுனி யிவரெலாம்
கூறிடும் வைத்தியமல்ல

என்மனது உன்அடிவிட்டு நீங்காது நிலைநிற்க
ஏதுளது புகல வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராஜனே!

பொழிப்புரை:

சிவபெருமானே சிவகாம சுந்தரி அம்மையின் அன்பிற்குரியவனே! தில்லை என்ற சிதம்பரத்தில் நடனமாடுகின்ற நடராசனே நான் உன்னிடம் கேட்பது வேடிக்கை அல்ல பில்லி சூனியம் என்பது அல்ல! ஏமாற்றுவித்தை அல்ல! எட்டு வகை தந்திரம் மந்திரம் அல்ல! பிறரைத் தன் வசமாக்கும் மந்திரம் அல்ல! மிகக்கொடிய வஞ்சனையுடைய பிறர் உடம்பில் புகுவது (கூடுவிட்டு கூடு பாய்வது) அல்ல!

Koviloor Digital Library

உயிர்களை ஏமாற்றுகின்ற ஜகஜாலம் அல்ல! பிறர் என்மேல் அம்பு, குண்டு கொண்டு தாக்கும் போது விலக்கச் செல்ல மந்திரம் அல்ல! உன் ரகசியங்களை கேட்கவில்லை! வானத்தில் பறந்து செல்வதற்குரிய குளிகை மருந்தல்ல! ஒருவர் மற்றவருடன் போட்டி புரிகின்ற மோடிவித்தை அல்ல! பிறர் மனத்தை மயக்கும் ஏமாற்றுவித்தை அல்ல.

அகத்தியமுனி, மச்சமுனி, சட்டமுனி, பிரம்மரிஷி, கொங்கணர், புலிப்பாணிமுனி, கோரக்கமுனி, திருவள்ளுவர், போகமுனி என்ற இவர்கள் எல்லாம் கூறுகிற மருத்துவ முறையைக் கேட்கவில்லை.

ஆனால் என் உள்ளம் எப்போதும் உன் திருவடியை விட்டு நீங்காமல் இருக்க (நிலைநிற்க) உன் அருள் அன்றி வேறு என்ன உள்ளது. உன் அருள் தந்து காக்க என்னிடம் நீ வந்து அருள் புரிய வேண்டும்.



Koviloor Digital Library

5

நொந்துவந்தே னென்று ஆயிரஞ் சொல்லியும்
செவியென்ன மந்த முண்டோ
நுட்பநெறி யறியாத பிள்ளையைப் பெற்றபின்
நோக்காத தந்தை யுண்டோ

சந்ததமுந் தஞ்சமென்று அடியைப் பிடித்தபின்
தளருகிற நெஞ்ச முண்டோ
தந்திமுக னறுமுகன் இருபிள்ளை யில்லையோ
தந்தை நீ மலடுதானோ

விந்தையும் ஜாலமும் உன்னிட மிருக்குதே
வினை யொன்று மறிகிலேனே
வேதமும் சாஸ்திரமும் உன்னையே புகழுதே
வேடிக்கை யிதுவல்லவோ

இந்தவுலகு ஈரேழும் அளித்தாய் சொல்லு
யினி உன்னை விடுவதில்லை
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராஜனே!

பொழிப்புரை:


இறைவனே சிவகாம சுந்தரி அம்மையின் அன்பிற் குரியவனே! தில்லை என்ற சிதம்பர தலத்தில் நடனம் இடும் நடராசனே!

நான் பலகாலமாக மனம் நொந்து இங்கு வந்துள்ளேன். உனக்கு ஆயிரத்திற்கு மேலாக பலமுறை எடுத்துக்கூறியும், உன் காதில் கேட்கவில்லையே உன் இருகாதும் கேளாதோ (செவிடு) தெளிவான வழியை அறியாத பிள்ளைகளைப் பெற்றபின் வருத்தப்படாத தாய், தந்தை இருக்க முடியுமோ? எப்போதும் உன் இரு

Koviloor Digital Library

திரு அடியையே அடைக்கலம் என்று பிடித்தபின் மனம் தளரவிடலாமா (விடக்கூடாதல்லவா). யானை முகம் கொண்ட பிள்ளையார், ஆறுமுகம் பெற்ற முருகன் இரண்டு பிள்ளைகள் உனக்கு உண்டே நீ அவர்கட்குத் தகப்பன் அல்லவா? இல்லை பிள்ளை பெறாத மலடா (நீ பெற்றவன்தானே). உன் செயலைப் பார்த்தால் எனக்கு வியப்பா அல்லது மாயவித்தையா என்று புரியவில்லை?

நான் செய்வது தெரியாமல் மயங்குகின்றேன். ஆனால் (ரிக், யசுர், சாமம், அதர்வணம்) நான்கு வேதமும், கற்பம், வியாகரணம், சோதிடம், நிறுத்தம், சிட்டை, சந்தோபிசிதம் என்ற ஆறு சாத்திரமும் உன் வீர, தீரத்தையே புகழ்ந்து கூறுகின்றனவே. இவைகள் புகழ்வது எனக்கு வேடிக்கையாக உள்ளது. இந்த அதலம் விதலம் முதலான ஏழு கீழ் உலகத்தையும் பூலோகம், புவலோகம் என்ற மேலுலகம் ஏழும் ஆக பதினான்கு உலகமும் படைத்துக் காப்பவன் என்று நூல்கள் கூறுகின்றதே. இவ்வளவு செய்த உன்னை இனி நான் விடவே மாட்டேன்.



Koviloor Digital Library

6

வழிகண்டு உன்னடியைத் துதியாத போதிலும்
வாஞ்சை யில்லாத போதிலும்
வாலாயமாய்க் கோயில் சுற்றாத போதிலும்
வஞ்சகமே செய்த போதிலும்

மொழியகனை மொகனை யில்லாமலே பாடினும்
மூர்க்கனே முகடாகினும்
மோசமே செய்யினும் தேசமே கவரினும்
முழுகாமியே யாயினும்

பழியெனக்கு அல்லவே தாய்தந்தைக் கல்லவோ
பார்த்தவர்கள் சொல்வார்களே
பாரறிய மனைவிக்குப் பாதியுடல் ஈந்தநீ
பாலனைக் காக்கொணாதோ

எழில் பெரிய அண்டங்கள் அடுக்காய் அமைத்தநீ
என்குறைகள் தீர்த்தல் பெரிதோ
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராசனே!

பொழிப்புரை:


இறைவனே, சிவகாம சுந்தரி அம்மையின் அன்பிற் குரியவனே! தில்லை என்ற சிதம்பரத்தில் எழுந்தருளிய நடராசப் பெருமானே!

நான் உன்னை அடைய வழியைக் கண்டுணர்ந்து முறையாகப் பாராட்டு செய்யாதவனே என்றாலும், உன்மேல் அன்பே இல்லாதவன் என்றாலும், நீ குடிகொண்ட கோயிலைச் சுற்றிவந்து வணங்காதவனே என்றாலும், உன்னை ஏமாற்றியவனே என்றாலும், நான் உன் புகழைப் பாடும்போதும், துதிக்கும் போதும்

Koviloor Digital Library

எதுகையும் மோனையும் இல்லாமல் பாடியவனே என்றாலும், முழுமுடனே ஆகி அதன் உச்சியில் இருந்தவனே என்றாலும், பிறரை மோசம் செய்தவனே என்றாலும், பிறருடைய நாட்டையே அவர் அறியாமல் கைக்கொண்டவனே என்றாலும், முற்றிய காமம் (ஆசை) உடையவனே என்றாலும், இப்படி எல்லா வழிகளிலும் நெறிமுறை அறியாமல் வாழ்ந்தவன் என்றாலும், இதற்கெல்லாம் பழி (குற்றம்) என்னைச் சேராது.

ஆனால் என்னைப் பெற்ற தாய்க்கும் தந்தைக்குமே பழி சொல்வார்கள். என்னைப் பழிக்க மாட்டார்கள். (தாயும், தந்தையும் நீயே உனக்குத்தான் பழி) நீ எப்படிப்பட்டவன் உலக மக்கள் எல்லாரும் அறியும்படி உனது உடலின் பாதியை உன் மனைவிக்குத் (உமாதேவிக்கு) தந்தவன். நீ சிறுவனாகிய என்னைக் காக்க வேண்டும். நீ அழகு அழகாகத் தோன்றுகின்ற அண்டகோடியை அடுக்கடுக்காகப் படைத்தவன் அல்லவா? செயற்கரிய செய்த உனக்கு இந்தச் சிறியவனான என் குறையை நீக்குவது ஒரு பெரிய காரியமா எளிதல்லவா!



Koviloor Digital Library

7

அன்னை தந்தைகளென்னை ஈன்றதற் கழுவனோ
அறிவிலா ததற் கழுவனோ
அல்லாமல் நான்முகன் தன்னையே நோவனோ
ஆசை மூன்றுக் கழுவனோ

முன்பிறப் பென்னவினை செய்தனென்று அழுவனோ
என் மூட அறிவுக் கழுவனோ
முன்னிலென் வினைவந்து மூளுமென்று அழுவனோ
முக்தி வருமென் றுணர்வனோ

தன்னை நொந்தழுவனோ உன்னைநொந்து அழுவனோ
தவமென்ன வென் றழுவனோ
தையலர்க் கழுவனோ மெய்வளர்க்க அழுவனோ
தரித்திர திசைக்கு அழுவனோ

இன்னு மென்னபிறவி வருமோவென்று அழுவனோ
எல்லாம் உரைக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராஜனே!

பொழிப்புரை:

இறைவனே, சிவகாம சுந்தரி அம்மையின் அன்பிற் குரியவனே! தில்லை என்ற சிதம்பரத்தில் நடனமாடும் நடராசப் பெருமானே!

நான் என்னைப் பெற்ற தாய் தந்தையர்களை நினைத்து அழுவதா? எனக்கு அறிவு இல்லை என்பதற்காக அழுவதா? என்னைப் படைத்த நான்முகன் என்ற பிரமனைக் கருதி அழுவேனா? என்னிடம் மண், பெண், பொன் என்ற ஆசைகள் உள்ளதே அதற்காக அழுவேனா? இதற்கு முன் பிறந்த

Koviloor Digital Library

பிறவியில் என்ன காரியம் செய்து இருப்பேன் என்று கருதி அழுவேனா? என் சர்வ மூட அறிவிற்காக நான் அழுவேனா? இதற்கு முன் என்ன என்ன பாவம் செய்தேன் அது வருமோ என்று அழுவேனா? வீடுபேறு கிடைக்கும் என்று உணர்வேனா? என்னை நானே வருந்தி அழுவேனா? தவம் செய்யவில்லையே என்று அழுவேனா?

என்னைச் சேர்ந்த பெண்களுக்காக அழுவேனா? உடம்பை வளர்க்க வேண்டுமே என்பதற்காக அழுவேனா? வறுமைத் துன்பம் என்னை வாட்டுகின்றதே பிறவி எது வரும் என்று அழுவேனா? இதை எல்லாம் எனக்குத் தெளிவுபடுத்த நீ வந்து கூற வேண்டும்.



Koviloor Digital Library

8

காயாமுன் மரமீது பூபிஞ்சு அறுத்தனோ
கன்னியர்கள் பழி கொண்டனோ
கடனென்று பொருள் பறித்து வயிறெரிந்தனோ
கிளை வழியில் முள்ளிட்டனோ

தாயாருடன் பிறவிக் கென்னவினை செய்தனோ
தந்த பொருளிலை யென்றனோ
தானென்று கர்வித்துக் கொலை களவு செய்தனோ
தவசிகளை யேசினேனோ

வாயாரப் பொய்சொல்லி வீண்பொருள் பறித்தனோ
வானவரைப் பழித் திட்டனோ
வடிவுபோல் பிறரைச் சேர்க்கா தடித்தனோ
வந்தபின் என் செய்தனோ

ஈயாத லோபியென்றே பெய ரெடுத்தனோ
எல்லாம் பொறுத் தருள்வாய்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராஜனே!

பொழிப்புரை:

இறைவனே சிவகாம சுந்தரி அம்மையின் அன்பிற்கு உரியவனே என்னைப் பெற்றவனே தில்லை என்ற சிதம்பரத்தில் கோயில் கொண்ட நடராசனே!

நான் மரங்களின் மீது ஏறிக் காய், பூ, பிஞ்சு என்ற இவைகள் வளருகின்ற பருவத்தில் அவைகளை அறியாமையால் அறுத்து எடுத்தேனோ! இளம் பெண்களின் பழிபாவத்திற்கு ஆளானேனோ, ஒருவரிடம் கடன் என்று பணம் பெற்று ஏமாற்றி னேனோ, பின்பு அவர் வயிறு எரிய நடந்து கொண்

Koviloor Digital Library

டேனோ மக்கள் நடக்கும் பொதுப் பாதையை முள் வைத்து அடைத்தேனோ! என் தாயாருடன் பிறந்த மாமன் முதலானவர்க்கு என்ன தீவினை செய்தேனோ! பிறர் அடைக்கலமாகத் தந்த பொருளைப் பின்பு அவர் கேட்டபோது தரவில்லை என்று கூறினேனோ! உலகில் நான்தான் பெரியவன் என்று அகங்காரம் கொண்டு பிற உயிர்களைக் கொன்றும் பிறர் செல்வத்தைத் திருடியும் வாழ்ந்தேனோ! நற்றவம் புரிந்த முனிவர்களை என் அறியாமையால் ஏளனமாகப் பேசினேனோ! வாய் கூசாமல் பொய்யைக் கூறி பிறர் பொருளை அபகரித்தேனோ! தேவர் முனிவர்களை இழித்தும் பழித்தும் பேசினேனோ! நல்லவன் போல் நடந்து பிறரை அடித்தேனோ! பிறர்க்கு ஒரு பொருளும் வழங்காத கருமி என்று பெயர் எடுத்தேனோ!

இப்படி எண்ணற்ற குற்றம் செய்திருந்தாலும் இவற்றை எல்லாம் நீ பொறுத்து எனக்கு நல்ல அருளைப் புரிய வேண்டும்.



9

தாயார் இருந்தென்ன தந்தையும் இருந்தென்ன
தன்பிறவி யுறவு கோடி
தனமலை குவித்தென்ன கனபெயர் எடுத்தென்ன
தாரணியை யாண்டு மென்ன

சேயர்க ளிருந்தென்ன குருவா யிருந்தென்ன
சீடர்க ளிருந்து மென்ன
சித்துபல கற்றென்ன நித்தமும் விரதங்கள்
செய்தென்ன நதிக ளெல்லாம்

ஓயாது மூழ்கினும் என்னபலன் யெமனோலை
ஒன்றைக் கண்டு தடுக்க
உதவுமோ யிது வெலாம்சந்தையுற வென்றுதான்
உன்னிரு பாதம் பிடித்தேன்

யார்மீது உன்மன மிருந்தாலும் உன் கடைக்கண்
பார்வை யது போதுமே
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராசனே!

பொழிப்புரை:

இறைவனே சிவகாம சுந்தரி அம்மையின் அன்பிற் குரியவனே தில்லை என்ற சிதம்பர ஊரில் இருந்து நடனமாடும் நடராசனே என்னைப் பெற்ற தந்தையே நான் கூறுவதை நீ சிறிது கேட்டருள்வாயாக!

இந்த உலகில் பிறப்பதற்குக் காரணமான தாயும் தந்தையும் இருந்து என்ன பயன்? தன்னுடன் பிறந்த அண்ணன், தம்பி, அக்காள், தங்கை என்னும் பற்பல கோடி உறவினர்கள் இருந்தும் என்ன பயன்? பொன்னும் பொருளும் பிற செல்வங்களும் மலைபோல் குவிந்து

Koviloor Digital Library

இருந்தும் என்ன பயன்? உலகில் பற்பல சிறப்புப் புகழ் பெற்றும் என்ன பயன்? உலகத்தை ஆளுகிற அரசனாக இருந்தும் என்ன பயன்? ஆண், பெண் என்று பெற்ற பலப்பல குழந்தைகள் இருந்தும் என்ன பயன்? குருவிற்குச் சீடனாகவும் அல்லது சீடனுக்கு குருவாகவும் இருந்தும் என்ன பயன்? அட்டமாசித்துக்கள் என்ற அணிமா, மகிமா, கரிமா, இலகிமா, பிரசாத்தி, பிரகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்ற எட்டு வித்தை கற்றும் என்ன பயன்?

நாள்தோறும் நோன்புகள் இருந்து என்ன பயன்? கங்கை, காவிரி, கோதாவரி முதலான புண்ணிய நதிகளில் இடைவிடாது மூழ்கிக் குளித்தும் என்ன பயன்? ஒரு நாள் எமன் ஓலை கொண்டு வரும்போது இவை எல்லாம் தடுக்க உதவுமோ? உதவாதே. இந்த உறவுகள் எல்லாம் சரக்குவிற்கும் சந்தைக் கூட்டம் போன்றது என்று நான் கருதியதால்தான் உன் இரு திரு அடியைக் கெட்டியாகப் பிடித்தேன்.

நீ யாரை மனத்தில் நினைத்துக் கொண்டு இருந்தாலும் சரி. ஆனால் உன் கடைக்கண் பார்வை மட்டும் என்மேல் பட்டால் போதும் என்று வேண்டு கின்றேன்.



Koviloor Digital Library

10

இன்னமுஞ் சொல்லவோ உன்மனங் கல்லோ
இரும்போ பெரும் பாறையோ
இருசெவியும் அந்தமோ கேளாது மந்தமோ
இதுவுனக்கு அழகு தானோ

என் அன்னை மோகமோ இதுவென்ன சோபமோ
இதுவுமுன் செய்கை தானோ
இருபிள்ளை தாபமோ யார்மீது கோபமோ
ஆனாலும் நான் விடுவேனோ

உன்னை விட்டெங்கு சென்றாலும் விழலாவனே
நான் உனையடுத்துங் கெடுவனோ
ஓகோ! இதுன்குற்ற மென்குற்ற மொன்றுமில்லை
உற்றுப்பார் பெற்ற ஐயா

என் குற்றமாயினும் உன் குற்றமாயினும்
இனிஅருள் அளிக்க வருவாய்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராஜனே!

பொழிப்புரை:

எங்கும் நிறைந்த இறைவனே சிவகாம சுந்தரி அம்மையின் அன்பிற்குரியவனே! தில்லை என்ற சிதம்பரத்தில் உள்ள நடராசனே.

உன் நிறையும் என் குறையும் விரிவாக எடுத்துக் கூறினேன். அவை போதவில்லையா? இன்னும் சொல்ல வேண்டுமா? உன் உள்ளம் கல்லினும் வலிமையானதோ? அல்லது அடித்து உருக்கும் இரும்பினும் உறுதியானதோ? அல்லது உடைக்க முடியாத கடும் பாறையை விட உறுதியானதோ? உன் இரண்டு காதுகளும் செவிடோ?

Koviloor Digital Library

கேட்காது மந்தமாகிவிட்டதோ? இப்படி இருப்பது உன் செயலுக்கு அழகாகுமோ? அல்லது என் தாயாகிய சிவகாமி அம்மைமேல் விருப்பமோ? இவ்வாறு நீ இருப்பதற்கு என்ன மனச்சோர்வு? அல்லது இவை எல்லாம் உன் திருவிளையாடலோ? விநாயகர், முருகன் என்ற இரண்டு பிள்ளைகள் மேல் உனக்குக் கோபமோ? இப்படி எல்லாம் நீ இருந்தாலும் நான் உன்னை விடுவேனோ? விடமாட்டேன்.

வேறு யார் மேலும் உனக்குக் கோபமோ? உன்னை விட்டு வேறு எங்கு சென்றாலும் நான் வீணாகி அழிந்து விடுவேன்.

இவை எல்லாம் உன் குற்றமும் இல்லை. என் குற்றமும் இல்லை. வேறு எந்த ஒரு குற்றமும் இல்லை. நான் கூறியதை எல்லாம் சிந்தித்துப் பார்ப்பாயாக. என்னைப் பெற்ற ஐயாவே! சரி, சரி உன் குற்றம் என்றாலும் என் குற்றம் என்றாலும் ஒன்றும் இல்லை. இவைகளை உன் மனத்தில் நினையாமல் உடனே இங்கு வந்து எனக்கு அருள் தர வர வேண்டும்.



Koviloor Digital Library

11

சனிராகு கேது புதன் சுக்கிரன் செவ்வாய்
குரு சந்திரன் சூரிய னிவரைச்
சற்றெனக் குள்ளாக்கி ராசிபன்னி ரண்டையும்
சமமாய் நிறுத்தியுடனே

பனியொத்த நக்ஷத்திரங்க ளிருபத்தேழும்
பக்குவப்படுத்திப் பின்னால்
பகர்கின்ற கிரணங்கள் பதினொன்றையும் வெட்டிப்
பலரையும் அதட்டி என்முன்

கனி போலவே பேசி கெடுநினைவு நினைக்கின்ற
கசடர் களையுங் கசக்கி
காத்தநின் தொண்டராம் தொண்டர்க்குத்
தொண்டர்கள் தொழும் பனாக்கி

இனியவள மருவு சிறுமணவை முனிசாமியெனை
யாள்வ தினியுன் கடன் காண்
ஈசனே சிவகாமி நேசனே எனை ஈன்ற
தில்லைவாழ் நடராஜனே!

பொழிப்புரை:

எங்கும் நிறைந்துள்ள ஈசனே, சிவகாமி அம்மையின் அன்பிற்குரியவனே! தில்லை என்ற திருப்பதியான சிதம்பரத்தில் நடனம் ஆடும் நடராசனே உனக்கு ஒரு பணிவான வேண்டுகோள் விடுக்கிறேன்.

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், வியாழன், சுக்கிரன், சனி, ராகு, கேது என்ற ஒன்பது கோள்களும் என்னைத் தாக்கா வண்ணம் அடக்கி நடக்கச் செய்ய வேண்டும்.

Koviloor Digital Library

அடுத்து மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம், சிம்மம், கன்னி, துலாம், விருட்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் என்ற பன்னிரண்டு ராசியும் என்னை வருத்தாவண்ணம் உயர்வாக நடக்க வைக்க வேண்டும்.

குளிர் தருகின்ற அசுவினி, பரணி, கிருத்திகை, ரோகிணி, மிருகசீரிஷம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி என்ற இருபத்து ஏழு நட்சத்திரமும் எனக்கு ஏற்றவாறு நடக்கச் செய்ய வேண்டும்.

அடுத்துச் சிறப்பாகக் கூறுகின்ற பவம், பாலவம், கௌலவம், தைதுலம், கரசை, வணசை, சகுனி, பத்திரை, சதுஷ்பாத், நாகவம், கிம்ஸ்துக்கினம் என்ற பதினொரு கிரணம் என்ற கரணத்தை எனக்கு அடங்கி நடக்கக் கண்டிக்க வேண்டும். சிலபேர் என்னிடம் கனிவாகப் பேசிப் பின்பு கேடு செய்கின்றனர். அந்தக் கசட மூடர்களைத் துன்புறுத்தித் திருத்த வேண்டும்.

இறைவா நீ எண்ணற்ற தொண்டர்களை (அடியவர் களை) காத்து அருள் செய்தவன். அந்தத் தொண்ட ருக்கும் தொண்டனாகப் பணி செய்ய இனிய பல வளங்கள் நிறைந்த சிறு மணவை என்ற ஊரில் வாழ்கின்ற முனிசாமி என்ற என்னைக் காப்பது உன் கடமை என ஆசிரியர் வேண்டுகோள் விடுக்கிறார்.

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
A. No. 40264

Koviloor Digital Library

Koviloor Digital Library

LKM

PUBLICATION